மக்கள் முரசு
மதுரை 22.8.2007

# இந்தியாவிலேயே முதல் முறையாக சாப் - பி 1 பயிற்சி மதுரையில் அறிமுகம்



மதுரை, ஆக. 22-

இந்தியாவிலேயே முதல் முறையாக சாப் - பி1 மென்பொருள் பயிற்சியை சாப் இந்தியா நிறுவனமும், ஆல்டியா இன்போடெக் நிறுவனம் இணைந்து மதுரையில் அறிமுகம் செய்கின்றன.

ஈ.ஆர்.பி. எனப்படும் என்டர்பிரைஸ் ரிசோர்ஸ் பிளானிங் வகை மென்பொருள் சேவையில் உலகின் தலை சிறந்த நிறுவனமாக விளங்கும் ஜெர்மனியைச் சேர்ந்த சாப் நிறுவனம், இந்த ஈ.ஆர்.பி. வகை மென்பொருள் சந்தையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக பி1 எனும் புதிய மென்பொருளை வடிவமைத்துள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன்பு உலகின் மற்ற பகுதிகளில் அறிமுகம் செய்யப்பட்ட இம்மென்பொருள் ஜனவரி 2006ல் இந்தியாவிலும் அறிமுகம் செய்யப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்ட பி1 மென்பொருள் அந்நிறுவனங்களின் நிதி, விற்பனை, கொள்முதல், உற்பத்தி, வாடிக்கையாளர் உறவு மேலாண்மை ஆகிய அனைத்து செயல்களையும் ஒருங்கிணைத்து உற்பத்தியை அதிகரிக்கவும், செலவுகளைக் குறைக்கவும், துல்லியமான நிதிய நிக்கைகளை தயாரிக்கவும் உதவும்.

அபரிமிதமான பொருளாதார வளர்ச்சியும், வெளிநாட்டு முதலீடுகளும் சேர்ந்து இந்திய சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு செல்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ளவும், வெளி நாட்டு நிறுவனங்களுடன் வசதியாகக் கூட்டு வைத்துக் கொள்ளவும் பி1 மென்பொருள் உதவுகிறது.

43 பில்லியன் டாலர்கள் மதிக்கத் தக்க சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சந்தையின் பெரும்பங்கை தனதுடையதாக்கிக் கொள்ள விரும்பும் சாப் நிறுவனம், 2010 ஆம் ஆண்டிற்குள் 15,000 நிறுவனங்களை வாடிக்கையாளர்களாக்குவதற்கு செயல் திட்டம் வகுத்துள்ளது.

மேலும் சாப் நிறுவனத்தின் 60 சதவிகித வருமானம் இந்த சிறிய மற்றும் நடுத்தர சந்தையின் பங்களிப்பு மூலமே சாத்தியம் என்பதும் கணிக்கப்பட்டுள்ளது.

பி1 மென்பொருள் அதிவேகத்தில் மார்க்கெட்டில் உலவ விடும் அதே வேளையில், வாடிக்கை நிறுவனங்களின் தேவைக் கேற்ப இம்மென்பொருள் கட்டுமானத்தையும், இயக்கத்தையும் மாற்றியமைத்துச் செயல்படுத்தக் ளர்களையும் உருவாக்க சாப் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னையைச் சேர்ந்த ஆல்டியா இன்போடெக் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து பி1 திறனாளர்களை உருவாக்கும் பயிற்சி மையத்தை மதுரையில் தொடங்கியுள்ளது.

ஆல்டியா நிறுவனத்தின் பயிற்சித் துறை தலைவர் சந்துரு முத்து கூறுகையில்,

வரும் ஆண்டுகளில் சாப் பி1 திறனாளர்களின் அபரிமிதமான தேவையைக் கணித்து வைத்திருக்கும் சாப் நிறுவனம், தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டு சிறந்த முறையில் தரமான பயிற்சி முறையை உருவாக்கி முதல் முறையாக வெளி உலகிற்கு அறிமுகப்படுத்துகிறது. இது நாள் வரை இப்பயிற்சி சாப் நிறுவனத்தின் கூட்டு நிறுவனங்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது என்று குறிப்பிட்டார்.

சாப் மதுரை பயிற்சி மையம் துவக்க விழாவில் தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் தாளாளர் கருமுத்து - தி. கண்ணன் தலைமை தாங்க, தமிழ் இசைச் சங்கத்தின் காப்பாளர் சேக்கப்பன், சாப் இந்தியா நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவின் மேலாளர் சஞ்சய் வஸ்வானி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து